சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். ஓ.எஸ். 118/2010

**PW 1 கவிதாமணி (எ) பேபி** **06.12.2023**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன ராமசாமி கவுண்டருக்கு 8 பேர் வாரிசுகள் ஆவர். 3ம் பிரதிவாதி மயிலாத்தாள் ராமாசாமி கவுண்டரின் மகள் என்றால் சரிதான். ராமசாமி கவுண்டரின் மகன் மயில்சாமி கவுண்டர் திருமணம் ஆகாமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். மயில்சாமி கவுண்டரின் பங்கும் ராமசாமி சொத்தின் பங்கிலும் 1/6 பங்கு மயிலாத்தாளுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் ராமசாமி கவுண்டரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். ராமசாமி கவுண்டர் ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதால் 3ம் பிரதிவாதிக்கு சட்டப்படி பங்கு உள்ளது என்றால் சரிதான். ராமசாமி கவுண்டரின் மனைவி வள்ளியம்மாள் ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மயில்சாமி கவுண்டரும் ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சின்னசாமி கவுண்டர் வாரிசுகள் இல்லாமலும் ஆவணங்கள் ஏதும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு பங்கு ஒதுக்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை 5,6,7,9,11 பிரதிவாதிகள் தரப்பில்**

தாவா சொத்துக்கள் ராமசாமி கவுண்டரின் சுயார்ஜித சொத்துக்கள் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ராமாசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை

காட்ட என் நான்கு மாமாவான 1, 2, 5 மற்றும் ஒரு மயில்சாமி ஆகியோர் எழுதிக் கொண்ட 01.10.1993 தேதியிட்ட பாகப்பத்திரத்தை தவிர வேறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெரியோர்கள் செய்த பைசல் படி குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து செய்து கொண்ட குடும்ப ஏற்பட்டின் படி ஆண் வாரிசுகள் மட்டும் சொத்துக்களை எழுத்து மூலமாக பாகம் பங்கி கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாகம் பற்றி என் அம்மாவிற்கும் மற்ற பெண் வாரிசுகளுக்கும் தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 09.04.2009 ம் தேதிதான் பாகம் கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை என் மாமாக்கள் தான் கவனித்து வருகிறார்கள் . என் தாயார் இருந்த வரை எவ்வளவு விகிதாசாரம் எந்த தேதியில் கொடுத்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். மயில்சாமி என்பவர் ஆசிரியராக இருந்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். மயில்சாமி 10.06.1997 ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் படி தனக்கு வாசாஆ 1 பாகப்பத்திரப்படி கிடைத்த பங்கினை 11 ம் பிரதிவாதி சரவணகுமாருக்கு பாத்தியப்படுத்திவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாதும. மயில்சாமி 02.02.1999 ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்த உடன் உயில் நடைமுறைக்கு வந்து சரவணகுமார் தான் அந்த சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமா அரசு பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி இறந்ததால் அந்த பணிக்கொடைகளை சரவணகுமாரின் தகப்பனாரான பரமசிவம் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். மற்ற வாரிசுகள் ஆட்சேபனை இல்லை என நோட்டரி வழக்கறிஞர் முன்பு கையெழுத்து பெற்று அதை பரமசிவம் தாக்கல் செய்து தான் பணிக்கொடைகளை பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு

தெரியாது. 2ம் பிரதிவாதி சின்னசாமி கவுண்டர் 10.06.1997 தேதியில் பாகப்படி கிடைத்த சொத்துக்களை 9ம் பிரதிவாதி ராமராஜ்க்கு ஒரு பதிவு செய்யப்பட்ட உயில்படி பாத்தியப்படுத்திவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சின்னசாமி இறந்த பிறகு உயில் நடைமுறைக்கு வந்து அந்த சொத்துக்களை 9ம் பிரதிவாதி ராமராஜன் தான் தற்போது அனுபவித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது., பவாசாஆ1 படி பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை 1993 ம் வருடம் பாகம் பங்கிக்கொண்ட பிறகு பாகப்பத்திரம் நடைமுறைக்கு வந்து இன்றைய தேதி வரை 4 ஆண் வாரிசுகளும் மற்ற பெண் வாரிசுகள் அறிய சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் ஆனைமலையில் உள்ளது. என் பெரியம்மா 3ம் பிரதிவாதி மயிலாமத்தாள் ஆனைமலையில் தான் உள்ளார். மற்ற பெண் வாரிசுகள் ஒடையகுளத்தில் உள்ளார்கள். இறந்துபோன என் தாயாரோ என் தாயாரின் சகோதரிகளோ பாகம் கோரி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியும் நான் வழக்கு போட்ட பிறகு வழக்கு நடத்தாமல் தற்போது தான் வழக்கு நடத்த வந்துள்ளார்கள் என்றால் சரிதான். பாகப்பத்திரம் பற்றியும் சகோதரர்கள் சொத்துக்களை அனுபவித்து வருவதை பற்றியும் என் தாயாருக்கும் அவரது சகோரிகளுக்கும் நன்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 20 வருடம் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என் தாயாருக்கு சொத்தில் உரிமை இருப்பதாக கருதினால் கூட உடமை நீக்கம் ஏற்பட்டதாக கருத வேண்டும் என்றால் சரியல்ல. பாகப்பத்திரப்படியும் உயில்படியும் பிரதிவாதிகள் சொத்தை அனுபவித்து வருவதால் எனக்கு சொத்தில் பங்கு எதுவும் இல்லை என்றாலும் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**12 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

3 ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை தமதாக ஏற்றுக்கொண்டு குறுக்கு விசாரணை

12 ம் பிரதிவாதி குமாரசாமிக்கு தாவா சொத்தில் 1/6 பங்கு ஒதுக்கீடு செய்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி